[22nd January 1965

கனம் திரு. வெ. ராமைய்யா: அதனால் மிகவும் அதிகமாக பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலை இல்லை. சில பசுக்கள் செத்து விட்டன. அதற்காக தேவையான அளவில் மற்ற இடங்களில் இருந்து பால் கொண்டு வர முயற்சி எடுக்கப்படும்.

திரு. இராம. அரங்கண்ணல்: பால் பண்ணையில் இருக்கிற லைசென்ஸ்தாரர்கள் போதிய லாபம் கிடைக்கவில்லை என்று அரசாங்கத்திற்கு ஏதாவது மகஜர் அனுப்பினார்களா? அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா: அந்த விவரம் என்னிடம் இப்போது இல்லை.

திரு. கரு. சிமைச்சாமி: பண்ணையில் பசுக்கள் தரும் பால் அளவை உயர்த்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்ற கேள்விக்கு உயர்ந்த ஜாதி மாடுகளா என்று உறுதிப்படுத்தி பரிசீலனை செய்த பிறகுதான் சேர்த்துக் கொள்ளப்படும் என்று பதிலில் இருக்கிறது. நாட்டுப் பசுக்கள் அதிகமாக பால் கறக்க அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுக்கிறது?

கனம் திரு. வெ. ராமைய்யா: இந்த ஆராய்ச்சி எல்லாம் வேறு இடத்தில் நடக்கும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: மாதவரம் பால் பண்ணையில் உள்ள பசுக்களில் எந்த ஜாதிப் பசுக்கள் அதிகமாக இருக் கின்றன?

கனம் திரு. வெ. ராமைய்யா: அந்த விவரம் என்னிடம் இப் போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

ஊத்தங்கரை உப தாலூகா

*** 75 கேள்வி—திரு. ம. கமலநாதன்:** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா:

ஊத்தங்கரை சப் தாலூகாவை தாலூகாவாக மாற்றும் உத்தேசம் உண்டா?

THE HON. SRI V. RAMAIAH: Yes. Sir. A proposal is under the consideration of the Collector of Salem to upgrade Uthangarai sub-taluk as a taluk.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஊத்தங்கரை சப்-தாலூகாவை தாலூகாவாக உயர்த்தும் யோசனை பரிசீலனையில் இருந்து வருகிறது என்று சொன்னார்கள். இந்த ராஜ்யத்தில் வேறு எந்தெந்தத் துணைத் தாலூகாக்களை தாலூகாக்களாக உயர்த்தும் உத்தேசம் இருக்கிறது? அப்படி உத்தேசம் உண்டா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இந்தக் கேள்வி ஊத்தங்கரை யைப் பற்றியது. அதற்கு வேண்டிய விவரத்தைக் கொடுத்திருக் கிறேன். பொது விவரம் வேண்டுமென்றால் பொதுக் கேள்வி போட வேண்டும்.

22nd January 1965]

திரு. எம். வி. கரிவேங்கடம்: அந்தத் தீர்மானம் எப்போது நிறைவேற்றப்படும்? அதற்கு ஏதாவது காலவரை நிர்ணயித்திருக்கிறார்களா?

கனம் திரு. வெ. ராமையா: கலெக்டர் பரிசீலனை முடிந்து, ரெவின்யூ போர்ட் பரிசீலனைக்கு வந்து முடிந்தவுடன் அரசாங்கம் பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டும் .

திரு. எம். வி. கரிவேங்கடம்: சேலத்தை இரண்டாகப் பிரித்து வட சேலம் மாவட்டத்தை தனியாக அமைக்க வேண்டுமென்று இருக்கிறது. அதற்கு முன் சப்-தாலூகாக்கள் எல்லாம் தாலுகாக்களாக மாற்றப்படுமா என்பதை அறியலாமா?

கனம் திரு. வெ. ராமையா: பொதுவாக ஒரு கேள்வி போட்டால் எல்லா விவரமும் சொல்லமுடியும்.

MR. SPEAKER: Questions 76 and 77 are postponed to tomorrow.

சர்வோதய மண்டல், வத்தலகுண்டு

*78. கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா:

பஞ்சாயத்து யூனியன் பொது நிதியிலிருந்து ஒவ்வொரு யூனியனும் ரூ. 25 வீதம், மதுரை மாவட்டம், வத்தலகுண்டு, சர்வோதய மண்டலுக்கு நிதி உதவி செய்ய அரசாங்கம் உத்திரவு போட்டுள்ளார்களா?

THE HON. SRI S. M. A. MAJID: Permission has been accorded to Panchayat Union Councils to contribute a sum of Rs. 25 from their General Funds to the Tamil Nad Sarvodaya Mandal, Batlagundu, if they wish to do so, subject to the availability of surplus funds in their General Fund Accounts and subject to their obtaining necessary sanction of the Panchayat Union Council by means of a resolution.

திரு. எம். தண்டாயுதபாணி: அதுபோன்று கூட்டுமன்றங்கள் தீர்மானம் நிறைவேற்றி இதற்கு நிதி கொடுத்த பஞ்சாயத்து கூட்டு மன்றங்கள் நம் மாநிலத்தில் எவ்வளவு?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அத்தகவல் இப்போது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்கிறேன்.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ADJOURNMENT MOTIONS.

(1) ALLEGED FAILURE OF GOVERNMENT TO TAKE STEPS TO PREVENT HINDI BECOMING OFFICIAL LANGUAGE OF THE UNION.

MR. SPEAKER: Regarding the adjournment motion given notice of by the hon. Member Sri K. A. Mathialagan about the failure of this Government to impress upon the Central Government the need for amending the Constitution on the Hindi matter, I want to know what the recent occurrence is.